விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 வெள்ளி விழா ஆண்டு 1983)
மலர் 25 மார்கழி 14 ரபி. அவ் 23 இதழ் 317
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-12 83

## தனியார் பஸ்ஸில் சிக்குண்ட பொலிஸ் சார்ஜன்ட் பலி!

[வவனியா நிருபர் ரி. விவேகராசா]

கொழும்பிலிருந்து வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஸுக்குள் சிக்குண்ட பொலிஸ் சார்ஜன்ட் ஸ்தலத்திலேயே மாண்டார்! நேற்று அதிகாலை ஒரு மணிக்கு இச்சம்பவம் நடந்தது

கொழும்பிலிருந்து பிரயாணிகளுடன் இந்த பஸ் அனுராதபுரத்துக்கும், மதவாச்சிக்கும் இடையில் வந்துகொண்டிருந்தது. அப்போது பின்னால் வேகமாக மோட்டார் சைக்கிளில் மதவாச்சியைச் சேர்ந்த சார்ஜன்ட்டும், கான்ஸ்டபிளும் பஸ்ஸை விலத்தி முந்திச்செல்ல முயன்றபோது, பஸ்ஸுக்குள் சிக்குண்டு ஸ்தலத்திலேயே மோட்டார் சைக்கிளை ஓட்டிய சார்ஜன்ட் மரணமானார். பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த கான்ஸ்டபிள் படுகாயங்களுக்குள்ளானார். இவர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்

(8ம் பக்கம் பார்க்க)

# சர்வ கட்சி மகாநாடு தீர்மானங்கள்: பொதுஜன வாக்கெடுப்பு

## ஜனாதிபதி ஜே. ஆர். கூறுகிறார்

(கொழும்பு)

"தமிழ் மக்களின் பிரச்னை தொடர்ாகப நடைபெறவுள்ள சர்வ கட்சி மகாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மக்கள் தீர்ப்பிற்கு விடப்படும். இது தொடர்பாக பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப் படும்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி லிகிதர்சேவை சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'ஒற்றையாட்சிக் கொள்கை என்ற அடிப்படையிலேயே எந்தப் பிரச்னைக்கும் தீர்வு காணப்படும் பெரும்பாண்மை மக்களின் விருப்பத்திற்கிணங்கவே எந்தப் பிரச்னையும் தீர்த்துவைக்கப்படும்.

'உள்ளூராட்சி ஸ்தாபனங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளது.

1956-ம் ஆண்டு தொடக்கம் தமிழர் பிரச்னை இருந்து வரு

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனவரி 4ம் திகதி வரை றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் நடைபெற்ற மினிபஸ்-சைக்கிள் விபத்தில் சம்பந்தப்பட்ட மினிபஸ் சாரதி ஜனவரி 4ம் திகதிவரை

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

சென்னை, டிச. 28

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பாராளுமன்ற இடைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

இத்தகவலை அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும்பொருட்டுக் கூட்டப்படவுள்ள சர்வ

8-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. பரீட்சை கணிதபாடம் ரத்து!

### ஜனவரி 11ல் மீண்டும் பரீட்சை

[கொழும்பு]

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க. பொ. த. [சாதாரண] பரீட்சையின் கணித பாடம் வினாத்தாள் II ரத்துச் செய்யப்பட்டு அதற்கான பரீட்சை ஜனவரி மாதம் 11-ம் திகதி மீண்டும் நடத்தப் படவிருக்கிறது.

வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானது பற்றி இரகசியப் பொலிஸார் நடத்திய விசாரணைகளில், கணித பாட

[8ம் பக்கம் பார்க்க]

## அச்செழு கூட்டுறவுச் சங்க கொள்ளை முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

அச்செழு கூட்டுறவுச் சங்கக் கடையில் நடந்த கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது.

கொள்ளை நபர் ஒருவர் கரத்திப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் பிற்பகல்

(8ம் பக்கம் பார்க்க)

## 3 இளைஞர்கள் கைது

### முகாம் அமைத்து செயல்பட்டனராம்

(மட்டக்களப்பு

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள தாந்தாமலை என்ற இடத்தில் முகாம் அமைத்துச் செயல்பட்டு வந்ததாகக்கருதப் படும் இளைஞர்கள் சிலரை நேற்றிரவு பொலிசார் கைது செய்தனர்.

சில தினங்களுக்குமுன் செங்கலடியில் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்த கொள்ளை தொடர்பாகத்தேடுதல் நடத்திய போதே மேற்படி இளைஞர்களின் முகாம் இருக்குமிடம் பொலிசாருக்குத் தெரியவந்ததாம்.

காட்டுப்பகுதியில் அமைந்துள்ள இந்த முகாமில் ஒரு றிவோல்வர், மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரியில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கருதப்படும் இரசாயனப் பொருட்கள், சிலதினங்களுக்கு முன் காத்தான்குடியில் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைப் பொலிசார் கைப்பற்றினர்களாம்.

ஸ்தலத்தில்வைத்து உடனடியாக எவரும் கைதுசெய்யப் படாதுபோனாலும் சுற்றுவட்டாரத்தில் வைத்து மூன்று இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

## இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானம்

(ஏ. வி. மாணிக்கம்)

இடம் பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்குத் திரும்புவதில்லை என்று முடிவு செய்ததுடன், தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக தீர்மானித்துள்ளனர் ஜனவரி முதல் வாரத்துக்குள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் சாத்வீகமான முறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க தீர்மானித்துளளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற இடம் பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியப் பொதுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சுமார் ஆயிரம் மாணவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சில மாணவர்கள் பல்கலைக் கழகம் திரும்பவேண்டும் என எதிர்த்துப் பேசியபோது காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன. பெரும்பாலான மாணவர்கள் திரும்பவும் போகக்கூடாதெனக் கூறினர்.

முடிவில் மாணவர்கள் அனைவரும் ஏகோபித்து இரு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் விரைவில் தீயணைக்கும்படை! சுப்பிரமணியம் பூங்காவும் புதுமைப்படுத்தப்படும்!!

### பட்ஜட் கூட்டத்தில் ஆணையாளர் தகவல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் உள்ள 4210 வீதி விளக்குகளுக்காக மட்டும் மின்சார சபைக்கு 38 லட்சம் ரூபா செலுத்தவேண்டும். இந்தச் செலவைக்குறைத்து அப்பணத்தை இப்பகுதியில் செலவிட வழிவகுத்துள்ளேன். வீதி விளக்குகளில் ஒன்றுவிட்ட ஒருவிளக்குகளைமட்டும் எரிய வைப்பதன் மூலம், மின்சார சபைக்கு கொடுக்கும்பணத்தை 27 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவாக குறைத்துள்ளேன்"

யாழ். மாநகர சபையின் மாதாந்த அதிகாரிகள் மாநாடும் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பித்தலும் நேற்று நடைபெற்றபோது யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாநகரசபை கூட்ட அறையில் நடந்த இக்கூட்டத்தில் சபையின் 84ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

ஆணையாளர் திரு சிவஞானம் மேலும் கூறியதாவது:

"தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவில் சிறுவர் பகுதிகளில் பறவைகள், மிருகங்கள் பகுதி திறந்துவைக்கப்படும்.

"நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் தீயணைக்கும் படை இல்லாதது பெரும் குறையாக இருந்து வந்துள்ளது. இத் தீயணைக்கும் படையை சிறிய அளவில் ஆரம்பிக்க 20 லட்சம் ரூபா செலவாகும். இதற்கு இந்த வரவு செலவுத்திட்டத்தில் 8லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளேன். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்தும் இதற்கு நிதிபெற முயற்சி எடுத்துள்ளேன். சித்திரை வருடப்பிறப்பிற்கு முன்பதாக யாழ்ப்பாணத்தில் தீ அணைக்கும் படை ஆரம்பித்துவைக்கப்படும்'' (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒருநாள் நல்ல இனக் புரேய்லஸ் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டுவிமாகி, 27/.3 மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 24043. (10795)

உரும்பராய் மருதனுமடம் வீதியில் 5½ பரப்பு காணியும் கல்வியங்காட்டில் பருத்தித்துறை வீதிக்கருகாமையில் மின்சார, நீர் வசதியுள்ள 3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடும் 2½ பரப்பு காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சித்தானந்தன் வன்னியசிங்கம் வீதி, இருபாலை ரோட், கோண்டாவில் 10799

கைத்தறியாளர்களுக்கு வாப்பிங் ரோலரும் கைத்தறியும், ரியூட்டரிகளுக்கு 15 கதிரைகள் மேசையுடன் இரு பக்கமும் எழுதக்கூடிய கரும்பலகையும் விற்பனைக்குண்டு. 327, நாவலர் ரோட் (வைமன் ரோட் சந்தி) யாழ்ப்பாணம். 10814

நல்ல நிலையிலுள்ள மோறிஸ் மைனர் EY இலக்கமுடையது கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: 573, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம். 10804

Underwood, Remington ஆங்கில Typewriters விற்பனைக்குண்டு. 30, சுவாட்ஸ்ஒழுங்கை, சுண்டிக்குளி (ஆசீர்வாதம் ஒழுங்கைக்கு முன்). 10820

தெல்லிப்பழை அரசாங்க ஆஸ்பத்திரிக்கு மேற்குப்பக்கமாக மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஏ. நடேசன், சட்டத்தரணி அளவெட்டி தெற்கு. அளவெட்டி. 10821

மானிப்பாய் கட்டுடைரோட்டில் மூன்று அல்லது ஏழு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. எஸ். ஜெயகுமார், "தேவவாசா", கத்தோலிக்க தேவாலயவீதி, சங்கானை. 10826

## விற்பனைக்கு

தமிழ், ஆங்கில தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: உதயன் புத்தக நிலையம், 127, பிரதான வீதி, பருத்தித்துறை. 10828

கொக்குவில் தலையாளி சபாபதி வீதியில், பிரம்படி வீதி சந்திக்கு அண்மையில் ½ பரப்பு காணியில் மூன்று அறைகளுடன் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. தட்சணாமூர்த்தி, 46, குமாரசாமி வீதி (பல்கலைக்கழகம் முன்பாக), திருநெல்வேலி. 10811

## தேவை

அனுபவமும் திறமையும் வாய்ந்த லொறிச்சாரதி தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 10797

நீண்டகால அனுபவமும் திறமையும்வாய்ந்த Accounts Clerk தேவை. சகல கணக்குகளும் கணக்கியல் முறையில் எழுதக்கூடியவர்கள்; நேரில் தொடர்புகொள்ளவும்: டில்கா பேணிச்சர் பலஸ், 234. 236 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 10796

மணமகள் தேவை; வெளிநாடு போய்வந்த 29 வயது, பள்ளர் இன, ரோமன் கத்தோலிக்க வாலிபருக்கு மணமகள் தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10805, ஈழநாடு, யாழ்ப்பாணம். 10805

Telex Machine உடன் தேவை. எந்த மொடல் என்றாலும் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10786, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (10786)

தொலைக்காட்சிப் பெட்டிகள் ரேடியோக்கள் திருத்துவதில் அனுபவம் வாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் தேவை. நேரில் வரவும். முகவரி: ஸ்ரான்லி பேர்ணிஷிங் பலஸ், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10829

## தேவை

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றுக்கு அனுபவமுள்ள 40வயதுக்கு மேற்பட்ட கார் அல்லது வான் சாரதி தேவை. அனுபவம் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். அனுபவத்துக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விளம்பர இல. 10815, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 10815

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

யாழ். நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதியதமிழ்ப்படங்கள் வெளிவந்துள்ளன. உங்களை அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10593

## தென்னோலை குத்தகை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டங்களில் 1984-ம் ஆண்டுபழுத்து விழுந்த தென்னோலை குத்தகைக்கு எடுக்க விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும். முடிவு திகதி: 31-12-1983.

பிரதேச அதிகாரி,
JEDB, Pallai.

10825

## தேங்காய் விற்பனை

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச்சொந்தமான தோட்டங்களில் தேங்காய் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் உடனடியாக விண்ணப்பிக்கவும். முடிவுதிகதி: 31-12-1983.

பிரதேச அதிகாரி,
JEDB, Pallai.

10824

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### யாழ். செயலக சிற்றுண்டிச்சாலை

மேற்படி சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரங்கள் இத்தால் கோரப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப பத்திரங்களை யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள நலன்புரிச் சங்க பொருளாளரிடம் ரூபா 1/- (ஒன்று) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். வைப்புப் பணமாக ரூபா 10/- செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் கடித உறையின் இடது மேற்புறத்தில் "சிற்றுண்டிச் சாலைக்கான கேள்வி" எனக்குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் 6-1-84 பி. ப. 2-00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் யாவும்

திரு. எஸ். சிவகுருநாதன்,
நிர்வாக உத்தியோகத்தர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ந. சிவசீலன்,
செயலாளர்,
யாழ்/செயலகநலன்புரிச் சங்கம்.

27-12-1983. (10813

## வியாபாரிகளுக்கு சலுகை

லீலா, மெய்கண்டான் மற்றும் கலண்டர்கள், டயறிகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு விலைகளுக்கு கமிஷன் வழங்கப்படும்.

### பூபாலசிங்கம் புத்தகசாலை,

04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
போன் : 23631.

## 31-ம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்

### வஸ்தியாம்பிள்ளை இராயப்பு

எம்மை ஆருத்துயரில் விட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் அனுதாபச்செய்திகள் அனுப்பியும் பல ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு எதிர்வரும்


29-12-1983 அவரின் 31-ம் நாள் நினைவு தினத்தில் 6-30 மணிக்கு

புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் பூசைப்பலியில் கலந்து அன்னாரின் ஆன்மா இறைவனடி சேர பிரார்த்திக்குமாறுவேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேத்தி, பேரன், மற்றும் உற்றார் உறவினர்.

கரவெட்டி. (10714)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



ஆறுமுகம் தனபாலசிங்கம்
(கச்சாய் வீரபத்திரர் ஆலய தர்மகர்த்தா)

மறைவு: 01-12-1983

எமது குடும்பத்தலைவரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

31-12-1983 (சனிக்கிழமை) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குலவிளக்கின் ஆத்மா சாந்தி அடைய, பிரார்த்திக்கும் தயார், மனைவி, பிள்ளைகள், மருமகன், மற்றும் உறவினர்கள்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

10801

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பு



தோற்றம் 13-4-1938

மறைவு 30-11-1983

### திரு. வே. சண்முகநாதர்

(P. S. சேவிஸ் ஸ்ரேசன் உரிமையாளர்)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும் சித்தன்கேணியில் வசித்தவருமாகிய எனது அன்புக் கணவர் வேலுப்பிள்ளை சண்முகநாதரின் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிரியையும் நாளை வெள்ளிக்கிழமை (30-12-1983) எனது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வந்து மதிய போசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.


மனைவி, பிள்ளைகள், தாயார், மற்றும் குடும்பத்தினர்கள்.

டச்ரோட்,
சித்தன்கேணி.

10831

## உ. சிவமயம்

## முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



ஜனனம் பிறப்பு 10-05-1922

சிவபதம் இறப்பு 9-01-1983

திதி 29-12-1983

### கு. சுந்தரம் ஆச்சாரி

உரிமையாளர்: விஜயலெட்சுமி ஆபரண மாளிகை
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

எம் அனைவரின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்ட அன்பு தெய்வமே இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்து ஓர் ஆண்டு பறந்து விட்டது நின் நினைவு உங்கள் அன்பு எம் நெஞ்சங்களை விட்டு என்றென்றும் மறக்காதப்பா.

ஆத்ம சாந்திக்காக இறைவனை அஞ்சலி செய்யும்.

மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள், பேரன், பேத்தி.

"நாதன் வாசம்"
உப்புகுள வீதி, ஊர்காவற்றுறை. 10816

# பயங்கரவாத தாக்குதலைச் சமாளிக்கும் பலம்

# அமெரிக்க ராணுவதளங்களுக்குஇருக்கவில்லை!

## குண்டுவெடிப்பு சம்பவத்துக்கும் தாமேபொறுப்பு என்கிறார் றீகன்

வாஷிங்டன், டிச. 28

லெபனானிலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் பயங்கரவாதிகளின் தாக்குதல்களைச் சமாளிக்கக்கூடிய பலத்தைக் கொண்டிருக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் றொனல்ட் றீகன் கவலை தெரிவித்துள்ளார்.

குண்டுகளை ஏற்றிக்கொண்டு ட்ரக் வண்டியில் வந்த பயங்கரவாதிகள் அமெரிக்கக் கடற்படைத் தளம்மீது மோதியதில் 19 வீரர்கள் கொலையுண்டதற்குத் தாமே பொறுப்பு என்றும் அமெரிக்க அதிபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இராணுவ தலைமையகத்தின் அறிக்கையை ஆராய்ந்த அதிபர் றீகன் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

கலிபோர்னியாவில் ஒருவார கால ஒய்வு நாளைக் கழிப்பதற்காகச் செல்வதற்கு முன்னர் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், லெபனானிலுள்ள அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கத் தேவையில்லையென்றும், அவர்கள் ஏற்கனவே பல கஷ்டங்களை அனுபவித்துவிட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்திய இராணுவத் தளபதி, லெபனானிலுள்ள இராணுவ நிலைகள் தகுந்த முறையில் பந்தோபஸ்து எடுக்கவில்லையென்றும்' இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்திருந்தார் [கு]

## தமிழ் நாட்டில் 64 பேர் வெள்ளத்துக்கு பலி!

(சென்னை)

தமிழ் நாட்டில் வெள்ளத்தினால் உயிரிழந்தோர் தொகை 64 ஆக அதிகரித்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 40 பேர் பலியானார்கள்.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட திருச்சி, தஞ்சை பகுதிகளை முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி ஆகியோர் சென்று பார்த்தனர். [கு]

## லெபனானில் தொடர்ந்து பலத்த சண்டை

பெய்ரூட், டிச. 28

லெபனான் இராணுவத்திற்கும் ஷியா முஸ்லிம் பிரிவுக்குமிடையே தொடர்ந்து சண்டை நடந்துவருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தம் செய்த சிலமணி நேரத்தில் கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று ஆரம்பமான இச்சண்டை தொடர்ந்து நடந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள பிரெஞ்சுத் துருப்புக்கள் இருக்கும் பகுதிகளில் பலத்த குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிகிறது. (கு)

## இந்தியாவில் சி. ஐ. ஏ. உளவு அம்பலம்

புதுடில்லி, டிச. 28

விமானப்படை துணை மார்ஷல் கே. எச். லர்கின்ஸ் உட்படப் பலர் அமெரிக்க உளவுச் சேவையான சி. ஐ. ஏ க்கு இராணுவ சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்டியதைப் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் பாராளுமன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இங்கு பலவட்டாரங்களிலும் கண்டனம் எழுந்துள்ளது.

துணை மார்ஷல் லர்கின்ஸ் ஆஸ்திரேலியாவில் குடியேறப் பயணமாவதற்குச் சற்று முன்னரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நிகராகுவாவில் எண்ணெய்க் குதமொன்றை சி. ஐ. ஏ ஏஜண்டுகள் தீவைத்ததை நியாயப்படுத்தி ஜனாதிபதி றீகன் பத்திரிகையாளர் மாநாடொன்றில்நியாயப்படுத்திப் பேசுகையில், உளவுஸ்தாபனத்தின் இரகசிய நடவடிக்கைகள் அரசாங்கத்தின் கொள்கையின் அம்சமாகும் என்று தெரிவித்துள்ளார்.

சி ஐ ஏ. அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கையை அமுல்படுத்துகிறது என்று கூறிய சி ஐ. ஏ. தலைவர் திரு. வில்லியம், விரைவில் வாஷிங்டன், மூன்றும் உலக நாடுகள் விஷயத்தில் கடுமையாக நடக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

மூன்றும் உலக நாடுகளில் அமெரிக்கா அதன் 'ஜீவாதார நலன்களை'ப் பாதுகாக்க இரண்டரை லட்சம் பலம் வாய்ந்த அதிரடிப் படையைநிறுவி ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்கோ அல்லது அவற்றின் கரையோரங்களுக்கோ அனுப்பிவைத்துள்ளது. அதற்குப் பக்கபலமாக சி ஐ ஏ. செயற்படுவதையே இந்தியாவில் அம்பலமான 'உளவு வேலை' காட்டுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்துசமயம் போதிக்க ஆசிரியர் நியமிக்கப்படுவர்

[மன்னார்]

''இந்து சமய கலாசார அமைச்சருடன் தொடர்பு கொண்டு தலைமன்னார், கிராமம், தலைமன்னார் துறை, பேசாலை, கரிசல் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இந்து சமய பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.''

இவ்வாறு கடந்த சனிக்கிழமை தலைமன்னார் பகுதிக்கு விஜயம்செய்த இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. ஏ. பாஸ்கரதாஸ் தெரிவித்தார்.

தலைமன்னார் பகுதிக்கு விஜயம்செய்த இந்து சமய கலாசார பணிப்பாளரிடம் இப்பகுதி இந்துக்களின் தேவைகள்பற்றி தலைமன்னார்துறை சர்வோதயத் தலைவர் திரு எம். கணேசன் விபரமாக எடுத்துரைத்தார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-02 | ஜெர்மனிய விளையாட்டுகள் |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | சிங்கள நிகழ்ச்சி |
| 7-45 | புதிய ரப்பர் தொழிற்சாலை திறப்புவிழா |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-45 | சிங்கள திரைப்படம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | திரைப்படத் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## மண்டைதீவில் பாதிக்கப்பட்ட வீடுகள் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த பெருமழையினால் மண்டைதீவில் பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் வெள்ளம் உட்புகுந்ததுடன் சில வீடுகள் முற்றாகவே சேதமடைந்துள்ளது.

பாதிக்கப்பட்ட வீடுகள் பற்றிய விபரங்களை மண்டைதீவு விசேட சேவை அலுவலர் திரு கே. சிவகுலசிங்கம் திரட்டி வருகின்றார். (கு)

## அமெரிக்காவில் கடும் குளிர்! இதுவரை 269 பேர் பலி!

### குடிக்க நீரின்றி மக்கள் அவதி

வாஷிங்டன், டிச. 28

அமெரிக்காவில் முன்னர் எப்போதுமில்லாதவாறு கடுங் குளிருக்கு இதுவரை 269 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தென்பகுதி குளிரினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தண்ணீர்க் குழாய்களில் நீர் உறைந்து பனிக்கட்டியாகிவிட்டதால் தண்ணீர் வசதி இல்லாமல் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் காய்கறிகளும் சேதமடைந்துள்ளன. [கு]

## ஜனத்தொகை அதிகரிப்பு: அமெரிக்க நிபுணர்கருத்தை சோவியத் நிபுணர் மறுக்கிறார்

ஜெனிவா, டிச. 28

மூன்றும் உலக நாடுகளில் அதிகரித்துவரும்ஜனத்தொகை தான், மோதல்களும் பயங்கரவாத நடவடிக்கைகளும் அதிகரித்துவரும் அபாயத்துக்குக் காரணம் என்று பிரபல அமெரிக்க ஜனத்தொகையியலாளர் மார்ஷல் கிரீன் கூறியகருத்துக்களை, விலென் இவானோவ் என்ற சோவியத் நிபுணர் எதிர்த்துள்ளார்.

''விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்தில் இது ஆதாரமற்றது. இந்த அமெரிக்க நிபுணரது இக்கூற்று உண்மையே மூடிமறைக்கும் செயலாகும். ''ஜனத்தொகை அதிகரிப்புத்தான் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம்'' என்று உழைக்கும் மக்களின் நிலையை சீர்குலைக்கும் வகையில் 1978ம் ஆண்டில் பிரபல ஜனத்தொகை நிபுணரான தோமஸ் மல்தூஸ் கூறிய கருத்தை ஒட்டியே மார்ஷல் கிரீன் கருத்தும் அமைந்துள்ளது'' என்று சோவியத் விஞ்ஞானப் பேரவையின் சமூகவியல் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்தவரான விலென் இவானோவ் கூறுகிறார்.

''கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பிறப்பு வீதம் குறைந்துள்ளது. ஆயினும் ஏழைகளும், அனாதைகளும் அப்படியேதானுள்ளனர். அண்மையில் நடைபெற்ற அமெரிக்க மேயர்களது மகாநாட்டின் அறிக்கையின்படி இந்த செல்வந்தநாட்டில் ஒரு கோடி 20 லட்சம் மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள் அதே வேளையில். சில அமெரிக்க புள்ளிவிபரங்கள் இத்தொகையை மேலும் அதிகமாகக் காட்டுகின்றன. காலனி ஆட்சிகளின் காரணமாகவே ஆசிய ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதார, சமூக சிக்கல்கள் ஏற்பட்டன. இந்த நாடுகளைக் கொள்ளையடித்தே மேற்கு ஐரோப்பிய நாடுகள் தம்மை வளப்படுத்தின. இதனை மூடிமறைக்கும் முகமாகவேமேற்கு உலக ஜனத்தொகை நிபுணர்கள், பட்டினிக்கும் ஜனத்தொகை வளர்ச்சிக்கும் நேரடி முடிச்சுப்போட முனைந்துள்ளனர்'' என்று இந்த சோவியத் நிபுணர் கூறுகிறார்.

## ''முகாமைத்துவ முறையே சிறந்தது''

(சாவகச்சேரி)

''அடுத்த ஆண்டு முதல் பாடசாலை பாரிய நிர்வாக அதிகார நிலைமாறி முகாமைத்துவ மனேஜர் நிலை பாடசாலைகளில் நிலவ இருக்கிறது இன்றை சூழ்நிலைகளில் கல்வி நிலையங்களில் முகாமைத்துவ முறையே அவற்றை வளர்ப்பதற்குச் சிறந்த அமைப்பாகும்.''

வடமாநில கல்வி அதிபதி திரு. எம் சிமியாம்பிள்ளை, பளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பரந்தன் - கிளிநொச்சி கல்வி வட்டார அதிபர்கள் கருத்தரங்கில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பரந்தன் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சிமியாம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

''ஆசிரியர் பற்றுக்குறை கிளிநொச்சியில் மட்டுமல்ல யாழ் குடாநாட்டிலும் உள்ளது. கிளிநொச்சித் தொகுதி உட்பட சகல தொகுதிகளுக்கும் 1510 ஆசிரியர்கள் இதில் 360 ஆசிரியர்கள் கிளிநொச்சிக்குத் தேவையாகவுள்ளனர்.

''1958க்குப் பின்னர் குடியேற்றம் மிகவேகமாகக் கிளிநொச்சியில் வளர்ந்துள்ளது இங்கு சிறப்பு ஆசிரியர்கள் உற வானோர்களேயன்றி ஆரம்ப ஆசிரியர்கள் உருவாக்கப்படவில்லை. கிளிநொச்சித்தொகுதி தமது ஆசிரியர்களை உருவாக்காத காரணத்தினாலேயே இங்கு ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கமுடியாத ஒரு தொடர்கதையாக இருக்கின்றது'' (கு)

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கருணா நிலையத்தில் கிறிஸ்மஸ் தின கொண்டாட்ட வைபவங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. சுப்பிரமணியம், வணபிதா. செல்வரத்தினம் அடிகளார், விவசாய அபிவிருத்தி அதிகார சபை மூகாமையாளர் திரு. அரசகுலசிங்கம், கருணாநிலைய நிர்வாகி திருமதி அரசகுலசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். கருணாநிலையமாணவர்கள் கொண்டாட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**மணிவாக்கு**

மனிதர் என்பவர் குழந்தைகளின் வளர்ந்த தோற்றமே.

—ஜோன் டிரைடன்.

# "தொடர்ந்தும் அகதிகளாக இருக்காதீர்கள்-வி. என். கூறுகிறார்

[சாவகச்சேரி]

"ஆடிக் கலவரத்தின்போது அகதிகளாக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் புகலிடம் தேடி ஓடிவந்த மக்களுக்கு நாம் ஆதரவு வழங்கிவருகின்றோம். நான்கு மாதங்களுக்கு மேலாக முகாமிலிருக்கும் நீங்கள் தொடர்ந்தும் முகாம் வாசிகளாக இருக்கக்கூடாது. உங்களின் சொந்தக் காலில் நின்று கூடிய சீக்கிரம் ஏனைய மக்களைப்போல வாழ முயலவேண்டும்".

இவ்வாறு சாவகச்சேரித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி அகதிகள்புனர் வாழ்வுத் திட்டத்தின் தலைவருமான திரு வி. என். நவரத்தினம், கைதடி அகதிகள் முகாமில் நடைபெற்ற அகதிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "அகதிகளாக வந்துள்ள மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதென்பது மிகவும்கடினமான காரியமாகும். இருந்தும், இப்பகுதியிலுள்ள சேவை நோக்கம் கொண்ட மக்களின் அன்பான ஆதரவினால் மிக விரைவில் நிரந்தரமான புனர் வாழ்வு சிறப்பதற்கான நம்பிக்கை ஒளி தென்படுகிறது" என்றார்.

இக்கலந்துரையாடலின் போது அகதிகளின் பிரதிநிதிகள் தங்களைஎதிர்நோக்குகின்ற பல்வேறு எதிர்காலப் பிரச்னைகளையிட்டும் கலந்தாலோசித்தனர். (சூ)

## நமது நோக்கு

# ஐ. நா. உச்சிக்கு இந்திரா

"மனித வர்க்கத்தின் ஐந்தில் ஒரு பங்குகொண்ட இந்தநாடு சுதந்திரம் அடைவதின் நோக்கம் வேறெந்த நாட்டையோ, இனத்தையோ, தனிமனிதனையோ அடிமைப்படுத்தவல்ல; பலமுடைய அல்லது பலமற்ற எவருக்கும் சுதந்திர உரிமை உண்டு. அதனைப் பலப்படுத்துவதே சுதந்திர இந்தியாவின் பெருங் கடமை".

இதனைக் கூறியவர் பாரதத்தின்தேசபிதா மகாத்மா காந்தி என்பது சொல்லாமலே விளங்கும்.

தமக்குப் பின் சுதந்திர இந்தியா பிரதமர் நேருவின் தலைமையில் சிறந்துவிளங்குமென்று அவர் ஏற்கனவே சொல்லிவிட்டார். பிரதமர் நேரு இந்தியப் பிரதமர் மட்டுமல்ல; அடிமை நாடுகள் அனைத்துக்கும் ஒரு வழிகாட்டியாக, ஆசிய ஜோதியாக விளங்கினார்.

பாரத தேசத்தின் பெருமைக்கு அவருடைய பணியும், அவருடைய பெருமைக்கு பாரதம் பாத்திரமாக இருந்ததும் ஒரு கயிற்றின் இரு இழைகளெனலாம்.

சர்வதேச சமாதானத்தை சிரமேற்கொண்டு அவர் நிறுவ உதவிய மண்டல சார்பற்ற இயக்கம் இன்று அவருடைய புதல்வி பிரதமர் இந்திராவின் தலைமையில் திறம்படத் தொடர்கிறது.

'திறம்பட' என்று நாம் சொல்வதற்குத் துணிவு அளிப்பது இன்று கிடைத்திருக்கும் செய்தி.

இன்று உலகை நடுங்க வைக்கும் அணு ஆயுத யுத்தம் ஒன்றைக் கருத்தில் கொண்டு ஐ. நா. ஒரு அவசர உச்சி மகாநாடு கூட்டுகின்றது. உலகின் மூன்று முக்கிய தலைவர்கள் அதற்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி றீகன், சோவியத் தலைவர் யூரி ஆந்திரபோவ், இந்தியப் பிரதமர் இந்திரா.

உலக சமாதானத்தைப் பேணவும், உலக அழிவைத் தடுக்கவும், பாரதம் பங்கு பற்றாத மகாநாடு என்னத்துக்கு உதவும்? கத்தியின்றி இரத்தமின்றி இந்திய உபகண்டத்தை உலகின் மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுத்தந்த மகாத்மாவின் வாரிசே இன்றைய பிரதமர் இந்திரா.

இந்தியாவில் என்னென்ன குழப்பங்கள் இருந்தாலும், அவற்றை மிகைப்படுத்திப் பிரசுரிக்கும் இந்தச் சிறு (சிறுமை) நாட்டின் தினசரிகள் சில இன்று இந்தச் செய்தியைக் கேட்டதும் ஏங்கப் போகின்றனவே!

கிணற்றுத் தவளைகளுக்கு நாட்டு வனப்பம் அவசியம். தமிழர் பிரச்னை இந்த நாட்டின் பிரச்னை என்பது தெரியும். இதற்குத் தீர்வுகாண, அமைதிக்கு உதவ இந்தியா முன்வருவதானால் அதற்கு என்னென்ன விதத்தில் இங்கு வியாக்கியானம் செய்து வசை பாடப்பட்டது! இந்த அறியாமைக்கு ஒரு நல்ல டோஸ் ஐ. நா. தலைவர் ஜோர்ஜ் இலுக்கா கொடுத்திருக்கிறார். எமது நாடு அரசியல் இருளிலிருந்து நீங்க இது பெரிதும் உதவும்.

இன்று உலகைக் கலக்கும் அணு ஆயுதப் போட்டிக்குப் பொறுப்பானவர்கள் ஜனாதிபதி றீகனும், சோவியத் தலைவர் யூரி ஆந்திரபோவும் என்பது தெரிந்தது; என்ன தெரியாதிருந்தது? இவர்கள் இருவருக்கும் மத்தியஸ்தம் வகிக்கக் கூடியவர் யாரென்பது.

கடந்த ஐ. நா. பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்தியப் பிரதமர், அணிசேரா நாடுகள் சார்பில், இவ்வித அமைதி மாநாடு ஒன்றைக் கூட்ட விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

அது மட்டுமா? ஐ. நா. நிகழ்ச்சிகள் உலகப் பத்திரிகைகளில் பிரசுரமானபோது அமெரிக்கா, ரஷ்யா பிரபல இடம்பெற்றன. இந்திராவின் வீரப்பேச்சு இருட்டடிக்கப்பட்டது.

"அடிமைகளை நாம் காண்பதுமில்லை; கேட்பதுமில்லை; அவர்கள் எங்கள் தாளத்திற்கு ஆடாவிட்டால் செல்லாக் காசென நாம் மதிப்பது வழக்கம்". இது அமெரிக்க அகங்காரம் என்று பல நிபுணர்கள் கருதினார்கள்

இவ்வித ஏகாதிபத்தியத் திமிரே இன்று மாற்றம் காண்கிறது. விட்டுக்கொடுக்கும் நெளிவு சுழிவு இல்லாது, அணு ஆயுதப் போட்டியை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பதை உணராது, திணறும் வல்லரசுகள் இருவரையும் மண்டல சார்பற்ற நாடுகளின் தலைவி சாந்தப்படுத்த முடியுமென்ற நம்பிக்கை இன்று பிறந்திருக்கிறது. சபாஷ் இந்திரா!

ஞானிகள் உதித்த இடம் சூரியன் உதயமாகின்ற கிழக்கே! புது வருடத்தை அச்சத்துடனும் மனக் கலக்கத்துடனும் அணுகும் உலக மக்கள் ஆயுதப் பரிகரண முயற்சி வெற்றிகாணவேண்டும் என்று ஆசைப்படுவதைவிட வேறென்ன செய்ய முடியும்?

அணிசேரா நாடுகள்ஒற்றுமைப்பட்டு ஒரு குரலில் தங்கள் தலைவிக்கு ஆதரவளிக்க வேண்டும். அதே சமயம் தங்கள் சொந்த நாடுகளிலும், நாடுகளுக்கிடையிலும் சமாதானம் நிலவ உறுதியுடன் உழைக்கவேண்டும்.

## மக்கள் கருத்து

# நல்லூர் சட்டநாதர் கோயில் நிலைமை

யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் இலங்கையில் நல்லூரில் இறுதியாகக் கோலோச்சியது உலகறிந்த உண்மைகளில் ஒன்றாகும். அக்காலத்தில் இவர்களால் நல்லூர் கந்தசாமி கோவில், வீரமகா காளியம்மன் கோவில் வெய்யில் உகந்த பிள்ளையார் கோவில், சட்டநாதர் சிவன் கோவில் ஆகியவை இவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை. இவை பிற்காலத்தில் அன்னியர் படையெடுப்பாலும் சமய மாற்றங்களாலும் அழிந்து ஒழிந்து இடிபாடுகளுடன நல்லூர் இராஜதானியின் பொறுப்பிலிருந்து சாதாரண பொதுமக்களின் ஆளுகைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது

இதில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்கு நல்லூர் இராஜதானியால் ஏகப்பட்ட சொத்துக்கள் வழக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இக்காணிகளில் தற்போது பல வீடுகளும் வியாபார ஸ்தாபனங்களும் குடியேற்றத்திட்டம் கைத்தொழில்பேட்டை போன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. ஆனால் இதில் குறிப்பிடத்தக்கது நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்திருக்கும் இத்திருத்தலத்திற்காக மரங்களும் பணமும் பொதுமக்களால் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திருத்தேர் ஏனோ இன்னமும் பூர்த்தியாக்கப்படாது அதன் பாகங்கள் திறந்தவெளியில் கவனிப்பாரின்றி அலங்கோலப்படுவது வேதனைதருவதாகும். இதற்குரிய கோவிலைப் பராமரிப்பவர்கள் திருத்தேரின் பாகத்தையாவது காப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் இதற்காக யாழ். அரச அதிபரின் மேற்பார்வையில் ஏதாகிலும் பாதுகாப்பு ஏற்பாட்டைச்செய்வதற்கு இதில் அக்கறையுள்ள இயக்கங்களும் சங்கங்களும் முயற்சி செய்யவேண்டும்.

க. சி. இராஜேஸ்வரன்.
நல்லூர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் 'திருவனந்தல்'

(புலோலி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மார்கழிமாத "திருவனந்தல்" பூசைகள் மார்கழித்திங்கள் முதல்நாள் தொடக்கம் விசேடமாக அதிகாலையில் நடைபெற்றுவருகின்றன இவ்விசேடபூசையில் பெருந்திரளான பக்த அடியார் கலந்துகொண்டு மாயவனின் அருளைப்பெற்று வருகின்றனர். இவ்விசேட பூசை தைப்பொங்கல் தினம் வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் பாரிய விவசாயப் பண்ணை

(கிளிநொச்சி)

தென்னிந்திய திருச்சபையின் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் நோக்கமாக பல அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொள்ளுமுகமாகவும், பாரிய விவசாயப்பண்ணை ஒன்று கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பல இலட்சம் ரூபா செலவில் அரசினரால் வழங்கப்பட்ட 50 ஏக்கர் காணியில் நிர்மாணிக்கப்பட்ட இப்பண்ணையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா அண்மையில் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார்.

இப்பண்ணை அமைவதற்கான ஏற்பாடுகளைத் தென் இந்தியத் திருச்சபையின் பங்குத்தந்தை வண பிதா ஜெபநேசன் அடிகளார் செய்திருந்தார்.

இப்பண்ணைத்திட்டம் பற்றி வண.பிதா ஜெபநேசன் அடிகளார் தெரிவித்ததாவது:-

பல வழிகளிலும் அபிவிருத்தி அடைந்துவரும் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய விவசாயப்பண்ணை ஒன்று அமையவேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு இப்பகுதியிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கமாகவும் இப்பண்ணையை நிறுவத்திட்டமிட்டோம்.

இதற்காக புதுமுறிப்புக் கிராமத்தைத் தெரிவுசெய்தோம். இப்பண்ணை நிறுவப்பட்டுள்ள 50 ஏக்கர் காணியை அரசு எமக்குக் குத்தகையாக வழங்கியுள்ளது. இப்பண்ணை அமைந்துள்ள இடத்திற்கு சலோம் நகர் என்று பெயர் இட்டுள்ளோம் என்றார். (சூ)

காங்கேசன்துறை

# அரசாங்க இளைப்பாற்று விடுதி மூடப்பட்டது!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறையிலுள்ள அரசாங்க இளைப்பாற்று விடுதியில் ஏற்பட்ட அசம்பாவிதத்தையடுத்து இவ்விடுதி தற்போது மூடப்பட்டுள்ளது

காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இந்த இளைப்பாற்று விடுதிக்கு வந்த சிலர் விடுதிப் பொறுப்பாளருடன் தகராறு செய்ததையடுத்து இவ்விடுதியில் அசம்பாவிதம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இதுகுறித்து காங்கேசன்துறைப் பொலிஸில் விடுதிப் பொறுப்பாளர் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிசார் விசாரணை மேற்கொண்டு மயிலிட்டியைச் சேர்ந்த சில சந்தேக நபர்களையும், அவர்கள் வந்ததாகக் கூறப்படும் இரு கார்களையும் பொலிஸ் பாதுகாப்பில்வைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் காரணமாக இந்த இளைப்பாற்று விடுதி மூடப்பட்டுள்ளது

வலி வடக்கு

# விவசாயிகள் அதிருப்தி

(மாவிட்டபுரம்)

வலி வடக்கில் சமீபத்திய வெள்ளத்தினால் பெருநஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க ஏற்பாடு எதுவும் செய்யப்படாமையால் விவசாயிகள் பெரிதும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

வலிவடக்கில் இம்முறை மிக அதிகமாக வெங்காயம் பயிரிட்டிருந்த விவசாயிகள் தமது தோட்டங்களில் வெள்ளம் தேங்கி நின்றதால் பெரிதும் நஷ்டமடைந்தனர். அத்துடன் வாழைகள் முறிந்தும், கால்நடைகள் இறந்தும் அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தது.

ஆனால்வலிவடக்கில் வெள்ள நிவாரணப் பணம் வழங்குவது தொடர்பாக செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகளின் கீழ் வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கும், மீன்பிடி வள்ளங்கள் வலைகளை இழந்த மீனவர்களுக்குமே நிவாரணப் பணம் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்தே விவசாயிகள் பெரிதும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

தமக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் மதிப்பிட்டு அதற்கேற்ப நிவாரணம் வழங்கப்படவேண்டுமென விவசாயிகள் கோருகின்றனர்.

# மன்னாரில் பாதிப்பு! நிதியுதவும்படி கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்கள் பெய்த பலத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கு 75 ஆயிரம் ரூபாவை அவசர நிதியாக அனுப்பிவைக்கவும்.

இவ்வாறு சமூகசேவைகள் அமைச்சை மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா. செந்தில்நாதன் கோரியுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 8ஆயிரம் பேர்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# "வ. போ. சபையை கட்டிஎழுப்ப மக்களின் பூரண ஆதரவும் ஊழியரின் உழைப்பும் தேவை"

## தலைவரின் புத்தாண்டு செய்தி

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டு மக்கள் எம் மேற் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையாலும் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்வது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பானது என்பதை உணர்ந்ததினாலும், எமது மனப்பூர்வவான நன்றியறிதலை கூறக்கடமைப்பட்டுள்ளேன். பஸ் பற்றுக்குறை இருந்தபோதிலும், மக்களின் நலன் கருதி மிகவும் சௌகரியமான முறையில் அதிசிறந்த சேவையை ஆற்ற எமது சபை ஊழியர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்''.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு எஸ். கனகரத்தினம் விடுத்துள்ள புத்தாண்டுச்செய்தியில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

"இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடாத்தப்பட்ட இச்சேவை, பன்முகமாக்கப்பட்டு, 1978ம் ஆண்டு தொடக்கம் ஒன்பது பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டதன் காரணமாக வட பிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில். பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகியசாலைகளை உள்ளடக்கி, இப்பகுதி வாழ் மக்களுக்கு ஒரு அளப்பரிய சேவையை நடாத்தி வருகின்றது. இது எமதுமக்களுக்காக, எமது மக்களால் நடாத்தப் படும் ஒரு சேவை.

இச்சேவைக்காக நமக்கு ஒதுக்கப்பட்ட பஸ் வண்டிகளின் தொகை மொத்தம் ஏறக்குறைய 300 ஆக இருந்த போதிலும், அண்மையில் ஏற்பட்ட கலவரங்களின் விளைவாக 40 புதிய பஸ்வண்டிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டதன் பெறுபேறாக, பஸ் வண்டிகளின் பற்றுக்குறையை ஈடு செய்ய முடியாத நிலையிலும் எமது நாட்டு மக்களுக்காக, வருங்காலச் செல்வங்களாகிய மாணவ மாணவிகளுக்காக வருமானமற்ற அனேக பாதைகளிலும் நாம்சிறந்தசேவையை ஆற்றி வருகின்றோம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எமது சபை ஊழியர்கள் இன்றும் என்றும் சேவையாற்றுவார்கள் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்குண்டு. 2500க்கும் அதிகமான ஊழியர்கள் இச்சேவையில் ஈடுபடுகின்றார்கள். இவர்களைச் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களுடன், ஏறக்குறைய 10,000 பேர்கள் எமது சபையின் ஊதியத்தை நம்பிவாழ்கின்றார்கள். இவர்களது வருங்காலத்தை முன்னிட்டும், பொதுமக்களாகிய உங்களது சௌகரியத்தைக் கருத்திற்கொண்டும், எமது ஸ்தாபனத்தை நன்கு பாதுகாத்துக் கட்டியெழுப்பவேண்டிய கடமை நமக்குண்டு. அதற்குப் பொதுமக்களாகிய உங்களது பூரண ஆதரவும், ஊழியர்களுடைய தன்னலமற்ற அயராத உழைப்பும் மிகவும் இன்றியமையாதனவாகும்.

எமது நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக நாம் செய்யும் சேவை இது என்பனித உணர்ந்து, எமது சபையின் சொத்துக்களை அதாவது உங்கள் சொத்துக்களைப் பாதுகாத்து, நம்மை வாழவைக்கும் இப்புனித சேவையை மென்மேலும் விஸ்தரித்து நாம் எல்லோரும் பயனடையப் பூரண ஒத்துழைப்புத் தாருங்கள்''. (க)

---

# அடிக்கடி கோளாறு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொலைபேசி பரிவர்த்தனை நிலைய தொலைபேசி இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து செயலற்று விடுவதால் இப்பகுதி தொலைபேசி பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி பரிவர்த்தனை நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள இயந்திரம் பல ஆண்டுகால பழைமைவாய்ந்ததாக இருப்பதாலேயே அடிக்கடி பழுதடைந்துவருவதாகவும், திருத்திய பின் சில நாட்கள் ஒழுங்காக இயங்கியபின் மீண்டும் பழுதடையும் நிலைக்கு வந்துவிடுவதாகவும் தொலைத்தொடர்பு ஊழியர்கள் கையை விரிக்கிறார்கள்,

இவ்வாறு பழுதடைவதால் இப்பகுதி தொலைபேசி பாவனையாளர்கள் அவசிய தேவைகளுக்குக்கூட தொலைபேசி இணைப்பைப் பெறமுடியாது பெரிதும் பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்படுவதுடன் தெல்லிப்பழையில் நிறுவ உத்தேசித்துள்ள தன்னியக்க பரிவர்த்தனை நிலையத்தைக்கூடிய விரைவில் நிறுவி இப்பகுதி தொலைபேசி பாவனையாளர்களின் கஷ்டத்தைப் போக்குமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

---

# இடமாற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரான டாக்டர் வி. சண்முகநாதன் ஜனவரி முதல் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார்.

இவரின் சேவையைப் பாராட்டுமுகமாக சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் ஊழியர்கள் பிரியாவிடை ஒன்றினை அளிக்கவுள்ளனர்.

(சு)

---

# 10 லட்சம் வீட்டுத் திட்டக்கருத்தரங்கு

(கோண்டாவில்)

யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் விசேட அலுவலர்கள், கிராமோதய சபை உறுப்பினர்களுக்கான பத்து லட்சம் வீட்டுத்திட்டச்சார்பான கருத்தரங்கு யாழ் நகர மண்டபத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் யாழ் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான தேவநேசன் நேசையா தேசிய வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர் திரு. எஸ். சாந்தலிங்கம் தேசிய நீர் வழங்கல்வடிகால் சபை பிராந்திய முகாமையாளர் கட்டிடப் பொருள்கூட்டுத்தாபனப்பிரதிநிதி ஆகியோரும் கருத்தினை வழங்கவுள்ளனர். (சு)

---

# மலேஷியாவில் மதிப்புடன் வாழ்ந்தவர்

சித்தன்கேணியில் பிறந்து மலேசியாவில் கல்வி இலாகாவில் பல பதவிகளில் கடமையாற்றிய திரு. மார்க்கண்டு அருணாசலம் அவர்களின் மறைவு அவரை அறிந்த எல்லோருக்கும் பெரும் இழப்பாகும். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியிலும் யாழ்ப்பாணக்கல்லூரியிலும் கல்விகற்று மலேசியா சென்று முதலில் ஆசிரியராகவும், பின்பு கல்விப்பரிசோதகர், கல்வி அதிகாரியாகவும் அவர் கடமையாற்றினார். அங்குள்ள கல்வி அறிஞர்கள் எல்லோரும் அவருக்கு மதிப்பளித்தார்கள். இங்கிருந்து அங்கு சென்றாலும் கல்வியுடன் தொடர்புள்ள அனைவருக்கும் வேண்டிய உபசாரம் செய்தார், சில வருடங்களுக்கு முன்பு அங்கு சென்ற வடமாகாண ஆசிரியர் சங்கக் குழுவினருக்கு மலேசியா சிங்கப்பூரில் பயனுள்ள சுற்றுலா அமைப்பதற்கு அவர் உதவினார். மலேசியாவில் சுகபோகங்களுடன் வாழ்ந்தாலும்சொந்த கிராமமாகிய வட்டுக் கோட்டை சித்தன்கேணியில் உள்ளவரின் நல்வாழ்வில் அக்கறை கொண்டிருந்தார். தவறாமல் புதுவருடப்புறப்பு தீபாவலி ஆகிய தினங்களுக்கு வருவாய் குறைந்த உறவினர், கோயில் பூசகர்களுக்கு பரிசு அனுப்பி வந்தார், உயர்கல்வி மேற்கொள்பவர்களில்வேண்டியவருக்கு மாதாந்தம் பண உதவி செய்து வந்தார். உயர் கல்வி கற்பவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு உபகாரத் திட்டத்தை வகுத்துள்ளார். அவரின் குடும்பத்தினர் இதனைத் தொடர்ந்து நடாத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம். அவர் அமரத்துவம் அடைந்த 31ம் நாளில் சித்தன்கேணி மகா கணபதி கோவிலில் விசேட பூசையும் இரங்கல் கூட்டமும் இடம்பெற்றன.

க. அருணாசலம்

---

# பிள்ளைகளுக்கு பாரமாக இருக்கவிரும்பாது தற்கொலை

(மாவிட்டபுரம்)

வாதநோயால் பீடிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் தமது பிள்ளைகளுக்கு பாரமாக இருக்கவிரும்பாமல் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

வசாவிளான் தெற்கைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தாயான செம்பன் கற்பகம் (60 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இம் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. திருநாவுக்கரசு விசாரணை நடத்தினார்.

கடந்த ஒருவருடமாக வாத நோயால் பீடிக்கப்பட்டிருந்த இப் பெண்மணி பிள்ளைகளுக்கு பாரமாய் இருக்காமல் தாம் தற்கொலைசெய்துவிடப்போவதாக கூறிவந்ததாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் கணவன் கதிரன் செம்பன், மகள் புனிதவதி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் ஐ. நகுலேஸ்வரன் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

---

# மந்திகை ஆஸ்பத்திரியில் இளைஞர்கள் சிரமதானம்!

(புலோலி)

பருத்தித்துறை சமூக நலன் புரி சங்க உறுப்பினர்களான 30 இளைஞர்கள் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை (மந்திகை)யில் பல்வேறு வகையான சிரமதான முயற்சிகளில் கடந்த சனிக்கிழமை ஈடுபட்டனர்.

பருத்தித்துறை சமூக நலன் புரி சங்கத் தலைவர் திரு. ரீ. குணபாலசிங்கம் தலைமையில் இச்சிரமதானமுயற்சிகள் நடைபெற்றன. பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியசாலை வளவில் துப்புரவுசெய்தல், நோயாளிகளின் 'வாட்டு'களைத் துப்புரவுசெய்தல், நோயாளிகளின் கட்டில்களுக்குத் தீந்தை பூசுதல் சுவர்களுக்குத் தீந்தை பூசுதல்போன்ற பல்வேறுவகையான சிரமதான முயற்சிகளில் இவ்விளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர்.

---

# "தொழிற்றிணை பயிற்சிநெறிகள் கிராமமட்டத்தில் செயல்படுத்த வேண்டும்"

## உதவி ஆணையாளர் கூறுகிறார்

[மாவிட்டபுரம்]

"தொழிற் திணைக்களத்தின் பயிற்சி நெறிகள் கிராமரீதியாக செயல்படுத்த கிராம மட்டத்திலுள்ளவர்கள் முயற்சி செய்யாதிருப்பது கவலை தருகிறது. இப்பயிற்சி நெறிகளை கிராம ரீதியாக செயல்படுத்த கிராமங்களில் இயங்கும் பொதுநல சேவா சங்கங்கள் ஏற்பாடு மேற்கொள்ளவேண்டும்-''

இவ்வாறு யாழ். தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. என். தியாகராஜா இணுவில் கிராம முன்னேற்றச்சங்க ஆதரவில் தொழில் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தையல் தொழிற் பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்ட மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் கூறினார்

இணுவில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. செ. இலகுநாதன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் மேற்படி பயிற்சிநெறிக்கான தொழில் திணைக்கள சான்றிதழை மாணவிகளுக்கு வழங்கி மேலும் பேசுகையில் திரு. தியாகராஜா கூறியதாவது:

தொழில் திணைக்களம் கிராமரீதியாக பல்வேறு தொழில் பயிற்சி நெறிகளை நடத்தி இளைஞர் யுவதிகளின் ஆற்றல்களை வளர்க்க தயாராக உள்ளது. மேசன்வேலை, தச்சுத்தொழில், தையல் போன்ற பல்வேறு பயிற்சி நெறிகளை தொழில் திணைக்கள உதவியுடன் கிராம ரீதியாக ஆரம்பித்து நடத்த முடியும். ஒவ்வொரு கிராமங்களிலும் இப்படியான பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கலாம். ஆனால் கிராம ரீதியாக இவற்றை ஆரம்பிக்க மக்களது ஆதரவு கிடைப்பதாக இல்லை. இந்நிலைமாறி ஒவ்வொரு கிராமங்களிலும் இப்பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க பொதுநல சேவா சங்கங்கள் முன்வர வேண்டும். கிராம முன்னேற்றச் சங்கங்களும் இதுவிடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்'' என்றார்.

வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. சி. செபநாயகம் கிராம அபிவிருத்திச் சங்க சான்றிதழை வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:

''பெண்களுக்கு தையல் பயிற்சி அவசியமானதொன்றாகும். தையல் பயிற்சியில் நவீன உத்திகளைக் கையாண்டு பெரும் வருமானத்தை ஈட்ட முடியும். ஆண்களுடன் பெண்களும் சரிசமனாக முன்னேறி வரும் இன்றைய நிலையில் பெண்களும் தொழில் துறைகளில் அதிக அக்கறை காட்ட வேண்டும்''.

மற்றும் இணுவில் விசேட சேவை உத்தியோகத்தர் திரு மா. தேவநேரு, இணுவில் குடும்ப சுகநல மகளிர் மன்ற தலைவி திருமதி ஆ. நாகலிங்கம், செல்வி வைத்திலிங்கம் வசந்த மோகனா கிராம முன்னேற்றச்சங்க செயலாளர் திரு தி. சி. சண்முகலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

---

# மன்னாரில் மலேரியாபரவும் அபாயம்

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் பல இடங்களிலும் மழைநீர்தேங்கி நிற்பதால் நுளம்பு உற்பத்தி அதிகரித்து மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மன்னார் பட்டினத்தில்சீரான வடிகாலமைப்புகள் இல்லாததாலேயே பல இடங்களிலும் நீர் தேங்கிநிற்கிறது.

---

# சாயிபாபா சமிதியில் கிறிஸ்மஸ் விழா

(புலோலி)

பருத்தித்துறை மந்திகை பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா சேவாசமித்தியில் திரு. வி. சபாநாயகம் தலைமையில் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் யாழ் மறைமாவட்டக்கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற ''உயிர்களின் தோற்றம்'' பற்றி உரையாற்றினார் விசேட ஆராதனைகளும், பஜனைகளும் இடம் பெற்றன. சமித்தியில் எதிர்வரும் 1ம்திகதி புதுவருட விழா நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# வெள்ள அகதிகள்

[மட்டுவில்]

வரணிப் பகுதியில் கடும் வெள்ளம் காரணமாகப் பல குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்து பாடசாலை, பொது ஸ்தாபனக் கட்டிடங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதுவரை சுமார் முப்பது குடும்பங்கள் அகதிகளாகப் பாடசாலைக் கட்டிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளன. தஞ்சம் புகுந்துள்ள குடும்பங்கள் தமக்கு நிவாரணம் கோரி, கிராமசேவையாளர்கள் ஊடாகத் தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபரிடம் ஓர் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

வெள்ள அகதிகளின் பரிதாபக் கோரிக்கையைத் தொடர்ந்து, தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா துரித நடவடிக்கையில் இறங்கியுள்ளார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

# யோகராசா கொலைவழக்கு: இருவருக்கு றிமாண்ட்

(புலோலி)

கரவெட்டி இளைஞன் யோகராசா கொலைச்சம்பவச் சந்தேக நபர்கள் இருவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர் மேலும் மூவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

கரவெட்டியைச் சேர்ந்த இளையதம்பி யோகராசா (வயது 27) என்ற இளைஞர் நெல்லியடியில் வைத்து கோஷ்டி ஒன்றினால் பயங்கரமாகக் கொலைசெய்யப்பட்டிருந்தார். இக்கொலைச்சம்பவம் தொடர்பாகப் பொலிசாரினால் தேடப்பட்டுவந்த ஐந்து சந்தேக நபர்களில் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்புட்டார். இன்னொருவர் வவனியாப் பொலிஸ் பகுதியில் உள்ள வெளிக்குளத்தில் இருப்பதாகப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள்களான கே. வி.சுப்பிரமணியம், எஸ் பாலசுப்பிரமணியம் ஆகியோர் அங்கு விரைந்து சந்தேக நபரான ஆறுமுகம் ஆனந்தராசா என்பவரைக் கைதுசெய்தனர்

சந்தேக நபர்பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதவான் சந்தேகநபரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ். மாவட்டத்தில்

# பார்வையற்றவர்களுக்கு உதவும் திட்டம்!

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐம்பது வயதுக்குட்பட்ட பார்வையற்றவர்களுக்கு உதவுவதற்கான திட்டமொன்றை பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் மேற்கொள்ளவுள்ளது.

அண்மையில் இந்தியா சென்றிருந்த சுவாமி சித்ரூபானந்தா இத்திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ளார்.

ஜெர்மனியில்உள்ள பார்வையற்றவர்களுக்கான உதவிகளை வழங்கும் நிறுவனம் தனியாக பார்வையற்றவர்களுக்கான பாடசாலைகளை அமைக்கவிரும்பவில்லை என்றும், கண்பார்வையுள்ளவர்களுடன் இவர்களும் சேர்ந்து படிப்பதையே விரும்புவதாகவும் தெரிவித்துள்ளதாகவும் இதன் அடிப்படையிலேயே 50 வயதுக்குக் குறைந்த பார்வையற்றவர்களுக்கு உதவ இந்நிறுவனம் முன்வந்துள்ளதெனவும் தெரிவித்த சுவாமி சித்ரூபானந்தா, ஐம்பது வயதுக்குக் குறைந்த கண்பார்வையற்று கல்வி கற்காமல் இருப்பவர்கள் தலைவர், ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளலாமென்று அறிவித்துள்ளார்.

உடுப்பு வாங்குவதற்கு

# மகன் காசுதராத கவலையால் தந்தை தற்கொலை!

(கிளிநொச்சி)

மகன் உடுப்பு வாங்கக் காசு தரவில்லையே எனக்கவலை கொண்ட 65 வயது வயோதிபத்தந்தை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு மரணமானூர்.

கிளிநொச்சி புதுமுறிப்பைச் சேர்ந்த மாரிமுத்து பெரியண்ணை என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எம். கணேசதுரை ஆஜர் செய்தார். சடல பரிசோதனையை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா நடத்தினூர்.

மரணமான பெரியண்ணையின் மகன் குமாரவேலு சாட்சியமளிக்கையில் சம்பவதினம் காலை தந்தை சாறம் வேண்ட 50 ரூபா காசு தருமாறு கேட்டார். என்னிடம் அப்போது காசு இருக்கவில்லை. எனவே 10 ரூபாவை மட்டும் கொடுத்துவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன்.

மத்தியானம் சாப்பிட வீடு வந்தபோது தந்தை சாப்பிடாது கிடப்பதாக எனது மனைவி சொன்னூர். பின்னேரம் வரும்போது சுருக்கிட்டு இறந்திருப்பதை அறிந்தேன் என்றூர்.

தற்கொலைஎன மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினூர்.

## சிறுவனின் பரிதாப மரணம்

[கிளிநொச்சி]

கிணற்றில் தண்ணீர் அள்ளிய பாடசாலைச் சிறுவன் துலாக்கயிறு அறுந்ததால் கிணற்றில் விழுந்து பரிதாபமாக மரணமானூன்.

இச்சோக சம்பவம் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் நடைபெற்றுள்ளது. கிருஷ்ணசாமி சுரேஷ் விஜயானந்தன் என்பவரே மரணமானவராவார்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிசைச் சேர்ந்த எம். கணேசதுரை ஆஜர்செய்தார்.

மரண விசாரணையின்போது மரணமானவரின் தந்தை விஜயானந்தன் சாட்சியமளிக்கையில்:-

"சம்பவதினம் மகன் வீட்டிலுள்ள கட்டில்லாத கிணற்றில் தண்ணீர் அள்ளிப் பாத்திரங்கள் கழுவினூர். நானும் மனைவியும் அருகிலிருந்த தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தோம்.

கிணற்றில் நீர் அள்ளும் போது துலாக் கயிறு அறுந்து வாளியுடன் மகனும் கிணற்றில் விழுவதைக் கண்டேன். உடனே ஓடிச்சென்று அவரைக் கிணற்றிலிருந்து மீட்டு கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கு மரணமானூர்".

விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது (சூ)

## மினிபஸ்ஊழியர் துக்கதினம்

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் ஒன்று தீக்கிரையானதைதொடர்ந்துநேற்று யாழ் இளவாலைமினிபஸ்கள்சேவையிலீடுபடவில்லை.

இந்தபஸ் ஊழியர்கள் துக்கதினம் அனுஷ்டித்தனர். யாழ் மினிபஸ் நிலையத்தில் கறுப்புக் கொடி தொங்கவிடப்பட்டிருந்தது. (க)

## வயோதிப மாது தற்கொலை

(கிளிநொச்சி)

மன நோய்க்கான 70 வயது வயோதிப மாது ஒருவர் கிருமிநாசினி அருந்தி மரணமானூர்.

கிளிநொச்சி 155ம் கட்டை கிருஷ்ணபுரத்தில் வசித்துவந்த வேலுப்பிள்ளை சத்தனப்பிள்ளை என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் எம். கணேசதுரை ஆஜர்செய்தார். சடல பரிசோதனையை பதில் வைத்தியஅதிகாரி லலித்குமார் நடத்தினூர்.

தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினூர்.

## 150பேர்மரங்களில் தஞ்சம்

(மன்னூர்)

மன்னூர் மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த பலத்த மழையினூல் கூராய்ஆறுபெருக்கெடுத்தபோது வீடுகளை இழந்த 150 பேர் தமது பாதுகாப்பைக் கருதி மரங்களில் ஏறி இருந்தனர்.

இவர்களை பாதுகாக்கும் பொருட்டு இலுப்பைக்கடவை கிராமோதயசபை தலைவர் திரு. எஸ். தர்மலிங்கம் படகுகளை அனுப்பிவைத்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். (சூ)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை (29-12-83)

மேடம்: பிரிந்தவர் இணைவர் பிரமச்சாரிகளின் மனதை மன்மதக்களை தாக்கும் திருமண விடயங்களுக்கு உகந்த தினம் குடும்பம் கோலாகலம்.

இடபம்: கோரப்பார்வை கொந்தளிக்கும் கொடுமைகள் கேட்க நேரிடும் சிறு விபத்துக்களுக்குமிடமுண்டு தொழில் துறையிலும் நஷ்டமேற்படும் நிதானம் வேண்டும்.

மிதுனம்: இன்று சுவைதரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும் பிதாவழித் தனமும் சேரும் காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் வரவிலும் திருப்தியுண்டு.

கடகம்: ஆடம்பரமான உடைகளை விரும்புவீர்கள் கற்றோர் துணையுடன்பயனடைவீர்கள் சிலருக்கு சில மாற்றங்களும் ஏற்படலாம்.

சிங்கம்: பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்குபுதிய ஆர்வம் பிறக்கும் புண்ணிய தல யாத்திரையும் மேற்கொள்ளப்படலாம் நல்லவருவாயான தினம்.

கன்னி: உறவு முறைகளில் பிளவு ஏற்படலாம் பண விடயத்தில் பகை தோன்றும் தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

துலாம்: எழுகுப் பார்வை உங்களை வட்டமிடும் எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம் எதிலும் ஏமாற்றம் தென்படும் அடக்கத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்க.

விருச்சிகம்: பேச்சுவன்மையினூல் பெரும் புகழ் கிட்டும் பெரிய இடத்துச் சிநேகிதம் கிட்டும் வரவிலும் உயர்வு தென்படலாம் சுபதினம்.

தனுசு: குடும்பத்தில் குறை கேட்க நேரிடலாம் மறைமுகமான காரியமொன்று அம்பலமாகும் விரக்தி மனப்பான்மை தென்படும் அமைதிநன்று.

மகரம்: அறிவுப்பசிக்குதாராளமாக விருந்து கிடைக்கும் வாகன சுகத்துடன் வழமான வாழ்க்கை நலனுமுண்டு தாய் வழிச் சுகமுமுண்டு.

கும்பம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதுமுகங்களின் நட்புகிட்டும் பிணி நிவர்த்திக்கும் இடமேற்படலாம்புத்திரர் மகிழ்வுமுண்டு.

மீனம்: வாய்வுக்கோளாறினூல் வேதனைப்படுவீர் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் எதிரிகளின் கோழைத்தன நடவடிக்கைகள் உங்கள் அமைதியைக் குலைக்கலாம் அமைதி வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சாவகச்சேரியில் தொலைபேசிசேவை சீர்கேடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரிலுள்ள தொலைபேசிப் பாவனையாளர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனையுடன் தொடர்புகொண்டு தொலைபேசி அழைப்புகளைப்பெறுவதென்பது அபூர்வமாகவுள்ளது. இச்சீர்கேடு காரணமாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியும் கூட எவ்விதமான மாறுதல்களும் ஏற்படாமல் இருப்பது கவலைக்குரியதாகவுள்ளதென தொலைபேசிப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி செய்திகள்

(கே வி. கே. திருலோகமூர்த்தி)

### புத்தகங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி பரந்தன் றேட்டறிக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி மகாவித்தியாலய இன்டறிக் கழகத்தினர் வித்தியாலயத்திற்கு பல பெறுமதி வாய்ந்த புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இப்புத்தக அன்பளிப்பு வைபவம் றேட்டறிக் கழகத்தலைவர் டாக்டர் என். சிறீதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கழகப் பிரமுகர்கள் ப. வை. ஜெயபாலன், வி. ரி. சிவலிங்கம் ஆசிரியர்கள் எ. மரியதாஸ், ம பத்மநாதன், அதிபர் குணசிங்கராசா ஆகியோரும் இவ்வைபத்தில் உரையாற்றினூர்கள்.

### கசரோக கொடிதின நிதி சேகரிப்பு

கிளிநொச்சியில்நடைபெற்ற கரைச்சி தேசிய கசரோகத் தடுப்புச்சபையின் கொடிதின வைபவத்தின்போது பரந்தன் இரசாயனத்தொழிற்சாலையில் மாத்திரம் 2000 ரூபா நிதிசேர்ந்துள்ளது இத்தகவலை பிரஸ்தாப கழகத்தலைவர் சட்டத்தரணி வி. ரி. சிவலிங்கம் தெரிவித்தார். கசரோகத்தடுப்பு முயற்சிகளை கிளிநொச்சியில் தீவிரப்படுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### 2வது ஆண்டு நினைவு!

பரந்தன் நவஜீவன ஸ்தாபகர் வணபிதா. தம்பிராசா அடிகளாரின் மறைவின் 2வது ஆண்டு நினைவு விழா நவஜீவனத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பெரும் தொகையானோர் கலந்து கொண்டு அஞ்சலிலுெத்தினூர்கள்.

## விமான விபத்தில் இறந்தவருக்கு இன்று திருப்பலி பூசை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நைஜீரியாவில் நிகழ்ந்த விமான விபத்தில் உயிரிழந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், யாழ், சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. எல். ஏ. எக்ஸ். செல்வநாயகத்தின் ஆன்ம சாந்திக்காக இன்று பிற்பகல் 4-30க்கு யாழ். புனித மரியன்னையின் பேராலயத்தில் 'திருப்பலி' ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது.

பயிற்சிகள்
International Telex Operators
செய்முறைப் பயிற்சியுடன் இங்கு மட்டுமே பயிற்சியளிக்கப்படுகின்றன.
★ Hotel Management
வெளிநாட்டுக் HOTELகளில் வேலைசெய்வதற்கேற்ற முறையில் பயிற்சியளிக்கப்படும்.
★ 3 மாத Spoken English
ஆசிரியர்: T. NALLATHAMBY (Dip-In-English)
SAM SOMASUNDARAM.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் 05-01-1984
THE SCHOOL OF COMPUTER STUDIES,
52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றாம் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
அரங்கு நிறைந்த
மகத்தான 3-வது
மகளிர் வாரம்
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**
(கலர்)
இசை: இளையராஜா

நேற்று-
"DOGS OF WAR"
இன்று-
"BIG RED ONE"
மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆங்கில திரைப்பட ரசிகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.
**Regal** (Jaffna)
Daily 10-30 a.m. 2-30, 4-45. 7-00 p.m. only
LEE MARVIN...in
**THE BIG RED ONE**
Action - Packed - Adventure
(A war movie for all age)
தவிர்க்க முடியாத காரணங்களினால் 30-12-83 மட்டுமே காண்பிக்கப்படும். மேலும் நீடிக்கப்பட முடியாமைக்காக வருத்தப்படுகிறோம்.
?
பயணங்கள் முடிவதில்லை

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
சிவகுமார் - சுஜாதா
**அன்னக்கிளி**

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
**கணவன்**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**தேன்கிண்ணம்**

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30 மட்டும்
சிவாஜி
கே. ஆர். விஜயாவின்
**ஊரும் உறவும்**
— வண்ண திரைஓவியம் —
மகளிர்க்கேற்ற குடும்பச் சித்திரம்! அரியசந்தர்ப்பம்!! (கடைசி வாரம்)

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
இன்று மட்டும்
**உல்லாசப் பறவைகள்**
30-12-83 முதல்
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)
வெகுவிரைவில்
சிவாஜி-சௌகார்-நாகேஷ்
**பாபு** (புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
[இன்று மட்டும்]
அன்னை வேளாங்கன்னி
நாளை முதல்
Charles Bronson
Lee Marviw in
**Death Hunt**
(Color)

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
**The Shining**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஸ்ரீபிரியா- அம்பிகா
**சங்கிலி** (புதிய பிரதி)


## விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

இவ்வருடத்திற்கான தேசிய விளையாட்டுப் போட்டிகள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய தலைவர்

(மன்னார்)

மாந்தை மேற்கு திருக்கேதீஸ்வரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. ஏ. துரைராஜா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராக ஜனாப். எஸ். எம். நிசாம் தெரிவு செய்யப்பட்டார்.

இயக்குனர்சபை உறுப்பினர்களாக திரு. ஏ. ஜேம்ஸ். திரு. கே. சரவணபவன், திரு. ஏ. திருநாவுக்கரசு திரு. பீ. கேதீஸ்வரன், ஜனாப். ஏ. எம். கௌது ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (சு)

## அகதிமுகாமுக்கு ஜேர்மன் தமிழர் உதவி

(சாவகச்சேரி)

மேற்கு ஜேர்மனியில் தொழில்புரியும் சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் கைதடி அகதிகள் முகாமிலுள்ள அகதிகளுக்கென உடுபுடவைகளைச் சேகரித்து அனுப்பியுள்ளனர்.

இவற்றினை புதுவருட தினத்தில் அன்பளிப்புச் செய்ய முகாம் நிர்வாகிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## புலோலி அம்பாள் ஆலயத்தில் திருப்பணி வேலைகள்

(புலோலி)

புலோலி தெற்கு அருள்மிகு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய புனருத்தாரண திருப்பணி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆலய புனருத்தாரண திருப்பணிச்சபைச் செயலாளர் திரு. சி. தில்லை நடராசா அறிவித்துள்ளார். அத்துடன் திருப்பணி வேலைகளில் இதுவரை பொறுப்பேற்கப்படாதுள்ள சில வேலைகளில் இதுவரை பொறுப்பேற்கப் படாதுள்ள சில வேலைகளில் ஒன்றைப் பொறுப்பேற்றுச் செய்து திருப்பணி வேலைகளை நிறைவுபடுத்த விரும்புவோர்கள் ஆலய புனருத்தாபன சபையுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


பேராதனை பல்கலைக்கழக (வெளிநிலை)
விரிவுரைகள்
**கலைமாணி (B.A.) 1984 டிசம்பர்**
மேற்படி பரீட்சைக்குரிய விரிவுரைகள் 1-1-1984ல் ஆரம்பமாகின்றன.
கலை முதற் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
குறிப்பு: அண்மையில் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் 80% எமது கல்லூரி மாணவர்களே சித்தியடைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


## கேள்விப் பத்திரம் — அறிவித்தல்

துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கான மேல்மாடிக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை 1984-ம் ஆண்டு ஜனவரி 1-ந் திகதி தொடக்கம் 5-ந் திகதி வரை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான திருமுறை மடத்திலுள்ள தபாற் பெட்டியினுள் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கட்டிடத்தின் வரைபடத்தைத் தேவஸ்தானப் பொது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
நிர்வாகசபை,
**துர்க்காபுரம் மகளிர் இல்லம்,**
தெல்லிப்பழை.

(10830)


இலங்கைப் பல்கலைக்கழக
**வெளிவாரி பட்டப்படிப்புகள்**
**கல்வியாண்டு 1984 / 85**
G. A. Q. — B. A.
First in Comm — B. Comm
First in Laws — L. L. B.

**துரித மீட்டல் வகுப்புக்கள்**
**G. A. Q. 1984**

| பாடங்கள் | விரிவுரையாளர் |
|---|---|
| 1. பொருளியல் | - திரு. அ. குமாரவேல் <br> - திரு. சி. வரதராஜன் |
| 2. இந்துநாகரீகம் | - செல்வி இ. அருள்நங்கை <br> திரு. வேதா |
| 3. தமிழ் | - இரு பிரபல விரிவுரையாளர் |
| 4. புவியியல் | - திரு. க. குணராசா |
| 5. அரசியல் | - ஜனாப் தமீம் |
| 6. மெய்யியல் | - திரு. வேல் சிவானந்தன் |

மேற்படி பாடநெறிகளுக்கான விரிவுரைகள்
**தை மாதம் 8-ந் திகதி (8-1-84)**
ஆரம்பமாகின்றன.
விண்ணப்பப்பத்திரங்களை நேரிலோ தபால் மூலமோ அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:
DIRECTOR,
**LAW CENTRE**
B. M. C. LANE, JAFFNA.
(10822


## Post Of Medical Officer

KAYTS CO-OPERATIVE HOSPITAL
(SINNA MOOLAI)

Wanted a Resident Medical Officer, preferably with obstetric experience. Fully furnished quarters and various fringe benefits available. Salary negotiable. Apply with complete bio-data, before 4-1-1984 to The President, M.P.C.S. Ltd, Kayts.

10823

## இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்

ரெண்டர்: இல: HO/T/133

**காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை களிமன் இறக்குதல் காங்கேசன்துறை**

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் மாதாந்தம் ஏறக்குறைய 12 ஆயிரம் மெற்றிக்தொன் களிமண் இறக்குவதற்கு முத்திரையிடப்பட்ட கடிதஉறைகளில் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொழும்பு-4 இல; 302, காலிவீதியிலுள்ள இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரிடமிருந்து அல்லது காங்கேசன்துறை காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை வழங்கல் உத்தியோகத்தரிடமிருந்து மீளப்பெறமுடியாத ரூபா 50/-கொடுப்பனவு செய்து பெறப்பட்ட கேள்விப்பத்திரங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இரத்துச்செய்யப்பட்ட பத்திரங்கள் ரூபா 10/-கொடுப்பனவின் பேரில் வழங்கப்படும் ஒவ்வொரு கேள்விவிண்ணப்பப் பத்திரமும் மீளப்பெறக்கூடிய ரூபா 1000/- விலைகோரும் உடன்படிக்கையுடன் [Bid Bond] சமர்ப்பிக்கப்படவேண்டும்.

விலைகோரல் பத்திரங்கள் 9-1-1984 பகல் 12-00மணி வரை விநியோகிக்கப்படும். விண்ணப்பங்கள் 1984-01-10ம் திகதி மு. ப. 10-00மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கொழும்பு - 4, 302, காலி வீதி. இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன வழங்கல் பகுதியில் பிரித்து பார்க்கப்படும்.

வழங்கல் முகாமையாளர்.

த. பெ. இல: 1382
302, காலி வீதி,
கொழும்பு - 4.

10771

# கவாஸ்கர் உலக சாதனை

(சென்னை)

இந்தியாவின் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர் சுனில் மனோகர் கவாஸ்கர் கிரிக்கெட் போட்டியில் 30-வது செஞ்சரியை அடித்து உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இந்திய-மேற்கிந்திய அணிகளுக்கிடையே நடைபெறும் 6-வது இறுதி கிரிக்கெட் டெஸ்டின் 4-ம் நாள் ஆட்டத்தில் கவாஸ்கர் இச் சாதனையை ஏற்படுத்தினார்.

அவுஸ்திரேலியாவின் பிரபல முன்னாள் கிரிக்கெட் ஆட்டக்காரர் டொனால்ட் பிரட்மன் ஏற்படுத்திய 29 செஞ்சரிகள் சாதனையை முறியடித்து கவாஸ்கர் இந்த உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். கவாஸ்கர் 99 டெஸ்டுகளில் இந்த சாதனையை ஏற்படுத்தினார்.

நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது இந்தியா முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 262 ஓட்டங்களை எடுத்தது.

கவாஸ்கர் 149 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருக்கிறார். ரவிசாஸ்திரி சிறப்பாக துடுப்பெடுத்தாடி 72 ஓட்டங்களை எடுத்தபோது, நேற்றையும்போது ஆட்டம் முடிவடைய வீசப்பட்ட கடைசிப் பந்துக்கு ஆட்டமிழந்தார். கவாஸ்கர் - சாஸ்தி 5-வது விக்கெட் ஜோடியாக 170 ஓட்டங்கள் எடுத்தனர். மல்கம் மார்ஷல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். (சூ)

## மரண அறிவித்தல்

### திரு. தம்பிஐயா பரமசிவம்

கிளிவெட்டி நெற்சந்தைப்படுத்தும் சபை-பொறுப்பதிகாரி

திருமதி கங்காதேவியின் அன்புக் கணவரும், அருள்நம்பி, அருள்பரன், அருள்வாணி, அருள்ஈசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வர்த்தகவிளான் காலஞ்சென்ற தம்பிஐயா சிவரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், உரும்பராய் வடக்கைச் சேர்ந்த சு. செல்வஞானம், மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி சந்திரவதி கிருஷ்ணர், திருமதி இந்திரவதி பஞ்சலிங்கம் (R.V.D.B ), திரு. த. சாம்பசிவம் (சுங்க இலாகா - திருமலை), திரு த. மகாசிவம் (பொதுச்செயலாளர் இ. த. ஆ. ச.), திருமதி குகவதி மாணிக்கவாசகர், திருமதி திலகவதி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. செ. யோகளிநாதன் (உரக்கூட்டுத்தாபனம் கிளிநொச்சி), செல்வி. வள்ளிநாயகி, செல்வி. உத்தமி உமையாள், செல்வி. சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனருமான தம்பிஐயா பரமசிவம் சிவபதமடைந்துவிட்டார். ஈமக்கிரியைகள் ஊரெழு கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் வியாழக்கிழமை (29-12-83) மாலை 3.00 மணிக்கு நடைபெறும்.

திருமதி. ப. கங்காதேவியும், பிள்ளைகளும்

வாணி இல்லம்,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். 28-12-83

(10841)

## மரண அறிவித்தல்

### விஜயகுமார் விஜயரெத்தினம்

அராலி கிழக்கைச் சேர்ந்த விஜயகுமார் விஜயரெத்தினம் பிரான்சில் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற ஓவசியர் விஜயரெத்தினம், திருமதி ராசபாக்கியம் விஜயரெத்தினம் ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும், ஜெயவதி, விஜயேந்திரன் (Contracts and Supplies, (M F G) Ltd , Colombo), விஜயகுமாரி, விஜயசுரூபி, விஜயமாலா, விஜயவதனு ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்ற பிரதம கட்டிட நிர்மாணப் பொறியியலாளர் பொன்னையா தயாபரன், சங்கரி விஜயேந்திரன், விக்னராசா (முருகன் மோட்டர்ஸ், விக்னு மோட்டர்ஸ் பங்காளர்) மகேந்திரன், (ஈராக்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29-12-83 வியாழக்கிழமை நண்பகல் பாரிஸில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

''ராச பவனம்'' திருமதி. R. விஜயரெத்தினம்
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(10837)

## மரண அறிவித்தல்

### திருமதி மு. சின்னக்குட்டி

கந்தரோடையைச் சேர்ந்த திருமதி மு. சின்னக்குட்டி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தில்லையம்பலம் முருகேசுவின் அன்பு மனைவியும், மலேசியா குவாந்தன் கண்மணி, சரஸ்வதி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற மலேசியா குவாந்தன் வேலுப்பிள்ளை, இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் கிருஷ்ணர் ஆகியோரின் அன்பு மாமியும், பாலசுப்பிரமணியம், தனலட்சுமி [அமெரிக்கா], பாலச்சந்திரன் [பொலிஸ் இன்ஸ்பெக்டர்-நாரன்பிட்டி], சிவானந்தன் [டுபாய்], சர்வானந்தன் [H. P. T. கொழும்பு] ஆகியோரின் பேத்தியுமாவார்.

அவரது பூதவுடல் இன்று வியாழக்கிழமை [29-12-83] காலை 11 மணிக்கு தகனத்துக்காக கந்தரோடை சங்கம்புலோ மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ளவும்.

அறிவிப்பவர்: சு. கிருஷ்ணர்
கந்தரோடை

[10842]

## மின் இணைப்பில் இளைஞர்கள் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பகுதிக்கு மின் சாரம் வழங்கும் ஐந்து மின் கம்பங்கள் சித்தன்கேணிக்கும் வடலியடைப்புக்குமிடையில் கடந்த பெரும் மழையின்போது வீழ்ந்து விட்டமையால் அப்பகுதி முழுவதுமே இருளில் மூழ்கநேர்ந்தது.

இப்பகுதிக்கு மீண்டும் மின் சாரம் வழங்க மின்சாரசபை எடுத்துக்கொண்ட முயற்சிக்கு உறுதுணையாக பருளாய் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக பலநாள் தாமதமாக விருந்த மின்சாரச் சேவை மீண்டும் விரைவாக ஏற்படுத்தப்பட்டு விட்டது.

## சாவகச்சேரிக்கு ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதிக்கான அபிவிருத்தி வேலைகளுக்கென 1984ம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபாவினை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ் அபிவிருத்தி வேலைகளில் மின் இணைப்பு, கல்வி, வீதிகள் திருத்தம், கிராமிய அபிவிருத்தி என்பன அடங்கியுள்ளன.

கைதடிவடக்கு, வரணி, மந்துவில், மட்டுவில் தெற்கு ஆகிய நான்கு இடங்களிலும் உபமின் நிலையங்கள் அமைப்பதற்கென ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜனவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மானிப்பாய்-கட்டுடையில் இவ்விபத்து நடைபெற்றது.

இவ்விபத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை ஆண் தாதியான என். செல்வநாதன் ஸ்தலத்திலேயே பலியானது தெரிந்ததே.

மினிபஸ் சாரதியான கே. விமலசுந்தரத்தை யாழ் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு சார்ஜன்ட் ஏ. அரியரத்தினம் கைதுசெய்து, யாழ் நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் கே. பி எஸ் வரதராசா முன்னிலையில் ஆஜர் செய்தபோது, எதிர்வரும் ஜனவரி 4ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (மா)

## உலக சுற்றுடல் தினப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

[கரவெட்டி]

''உலக சுற்றுடல் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வித் திணைக்களத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்பட்டன.

பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை இப்பரிசில்களை வழங்கினார்.

பேச்சுப் போட்டியில் முதலிடத்தை செல்வி சோதீஸ்வரி அப்புலிங்கம் (யாழ் வேம்படி மகளிர்), இரண்டாமிடத்தைச் செல்வன் சோ. செல்வராஜா (நெல்லியடி ம. ம. வி.) மூன்றாமிடத்தைச் செல்வன் ஏ பார்த்திபன் (தெல்லிப்பழை யூனியன்) ஆகியோர் பெற்றனர்.

கட்டுரைப் போட்டியில் பின்வருவோர் பரிசுகள் பெற்றனர். முதலிடம் வி. ரவிசங்கர் (ஹாட்லி), இரண்டாமிடம் ஆர். சகீலா (யாழ் கன்னியர் மடம்), மூன்றாமிடம் வி காண்டீபன் (சென். ஜோன்ஸ்

## அச்செழு—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் வந்த 5 வாலிபர்கள் துப்பாக்கி முனையில் சங்கக் கடையில் கொள்ளையடிக்க முயன்றதாகவும், கடையில் உள்ளவர்களை மேலே கையைத் தூக்குமாறு பணித்ததாகவும் கூறப்படுகிறது.

கடையில் நின்றஒருஇளைஞர், கொள்ளையர் வைத்திருந்த துப்பாக்கியை அவதானித்துவிட்டு ''பொய்த்துவக்கடா'' என்று கத்த கொள்ளையர் ஓட்டம் பிடித்ததாகக் கூறப்படுகிறது.

கடையில் நின்றவர்கள் சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் துரத்திச் சென்று ஒருவரைமடக்கிப்பிடித்தனர். (க)

## பஸ் சேவை துண்டிப்பு

[பூநகரி]

பாலியாறு பெருக்கெடுத்துள்ளதால், சங்குப்பிட்டி-மன்னார் பஸ் சேவை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள், தமது பயணத்தை நடந்தும், ட்ரக்டர், வண்டில் மூலமும் செய்துவருகின்றனர்.

இப்பாதைகளில் நாலு அடிக்கு வெள்ளம் நிற்பதால் மினி பஸ்கள், பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை தற்போது கிளிநொச்சி டிப்போ பஸ்கள் பல்லவராயன் கட்டு வரை சேவையில் ஈடுபடுகின்றன.

[கெ]

## சர்வகட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அன்றைய அரசுக்கு பிரிவினை இயக்கங்கள்மீது தடைவிதிக்கும் பொறுப்பு இருந்தது. அப்போதே தடைவிதிக்கப்பட்டிருந்தால் பிரிவினை இயக்கங்கள் எழுந்திருக்காது.

'ஜூலை கலவரத்தினால் அரசுக்கு 200 கோடி ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது.

'வட்டமேசை மகாநாட்டின் தீர்மானங்கள் 60 லட்சம் வாக்காளர்களின் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்படும்' என்றார். [வெ]

## சாகும்வரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகங்களுக்கு திரும்புவதில்லை என்று உறுதியளித்தனர்.

''யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில், இடம் பெயர்ந்த தமிழ் மாணவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

''இருபல்கலைக்கழகங்களிலும் இல்லாத பீடங்களை உடனடியாக ஆரம்பித்து அதில் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு அனுமதி வழங்கவேண்டும்.

இந்த இரு கோரிக்கைகளும் நிறைவேறும்வரை குறிப்பிட்ட ஒரு இடத்தில் விரைவில் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதென்றும் முடிவு செய்தனர். [மா]

## க. பொ. த. —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பாடத்துக்கான பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பலர் கைதுசெய்யப்படவுள்ளதாக நம்பப்படுகிறது. [சூ]

## தனியார் பஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் றம்பாவை என்ற இடத்தில் நடந்தது. இந்த விபத்தை அடுத்து, பிரயாணிகள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எப்படித் தமது பயணத்தைத் தொடர்வது என்ற ஏக்கத்தோடு காணப்பட்டனர்.

சாரதி ரி. பாக்கியநாயகமும், கிளீனரும் யாழ். பொலிஸில் வைக்கப்பட்டுள்ளனர்.

பஸ்சாரதி பின்னர் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்குப் பாரப்படுத்தப்பட்டார். [மா]

## இடைத்தேர்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி மகாநாட்டிற்குப்பின்னர் இவ்இடைத்தேர்தல்களை நடத்துமாறு பல்வேறு அரசியல் கட்சிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே ஜனாதிபதி ஜெயவர்த்தன இடைத் தேர்தல்களை ஒத்திவைத்துள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

இவ்இடைத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் நாள் எதிர்வரும் ஜனவரி மாதம் 19-ம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [வெ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது; Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number R 100236/81. Eelanadu P. O. Box 49, Telephone 22389 — 24126.